# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
## சட்ட பீடம்
## சட்டமாணிப் பரீட்சை - ஆண்டு I, 2018
## குற்றவியல் சட்டம் (CRIMINAL LAW)
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

1. **பின்வருவனவற்றிற்கு காரணங்கள் தந்து சுருக்கமான விடையளிக்க. இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்துமாறும் வேண்டப் படுகின்றீர்.**

(i) *R v. Somapla* (1969) 72 N.L.R 121 எனும் வழக்கிலே வழங்கப்பட்டதான H.N.G Fernando J அவர்களின் தீர்ப்பு ஏன் முக்கியமானது?

(ii) உட்டோப்பியா பல்கலைக்கழகத்தின் மாணவர்களால் இசை மாலை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. விழாவில் போது இளமாணி மாணவனொருவனான சுமன் என்பவன் மென் குடிபானப் போத்தல்களை எறிந்து கட்டிடத்தின் கண்ணாடிகளை உடைத்தான். சுமனினால் செய்யப்பட்ட குற்றமென்ன?

(iii) உட்டோப்பியா பல்கலைக்கழகத்தின் மாணவனொருவனான சுமன் என்பவன் பல்கலக்கழகத்திற்குக் கட்டைக் காற்சட்டையுடன் வரும் பழக்கமுடையவனாவான். பெரும்பானமையான மாணவர்கள், முக்கியமாகப் பெண் மாணவர்களும் கல்விசார் உத்தியோகத்தர்களும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. கட்டைக் காற்சட்டை அணிய வேண்டாமென்பதான அவர்களின் கோரிக்கை சுமனினால் செவிமடுக்கப் படவில்லையென்பதுடன் அவன் இப்பழக்கத்தைத் தொடர்ந்து செய்தும் வந்தான். சுமன் குற்றமேதும் செய்துள்ளானா?

(iv) ராஜா என்பவரும் ராணி என்பவளும் அலுவலகமொன்றில் சக ஊழியராவர். ஒழுக்கமற்ற வார்த்தைகளடங்கிய குறுந்தகவல்களை ராஜா ராணிக்கு அனுப்புவதுண்டு, குற்றமெதற்கும் ராஜா குற்றஞ் சாட்டப்பட முடியுமா?

(v) புகையிரத இயந்திர சாரதியொருவனான ருவன் என்பவன், மற்றவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது வேலைக்குச் சமூகமளித்தான். தனது கடமைக்காக அவன் புகையிரததில் ஏற முற்படும் போது கூட்டமொன்று சத்தமிட்டவாறு அவனை நோக்கி வருவதைக் கண்டான். இறங்கிய அவன் ஓடத் தொடங்கினான். கூட்டம் தொடர்ந்து அவனைத் துரத்தவே கல்லொன்றை எடுத்து அவன் எறியவே அது அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த சிறுவனொருவனைத் தாக்கியது. அச்சிறுவன் மண்டையோடு முறிவிற்குள்ளாகினான். ருவனுக்கு உரித்தான மாறுபட்ட எதிவாதங்கள் எவை என்பதுடன் மிகப் பொருத்தமான் எதிர்வாதம் எது?

2, சுமணா என்பவள் 15 வயதுடைய மாணவியொருத்தியாவாள். மழை நாளொன்றில் சனநெருக்கமுடைய பேருந்து வண்டியொன்றில் அவள் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது நிகால் என்பவன் அவளைத் தடவினான். அச்சமடைந்த சுமணா பேருந்தை விட்டு இறங்கி முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி அதில் ஏறினாள். நிகாலும் பேருந்தை விட்டு இறங்கி அதே முச்சக்கர வண்டியில் ஏறினான். சத்தமிட முடியாதவாறு நிகால் அவளது வாயை மூடினான். அவளது முரண்டுக்கு மத்தியிலும் முச்சக்கர வண்டியானது வேறு பாதையில் ஜனசஞ்சாரமற்ற இடத்தைக் கடந்து சென்றது. அரை மணித்தியாலத்தின் பின் சுமனா முச்சக்கர வண்டியிலிருந்து வெளியே தள்ளப்பட்டாள். பாதையருகில் மயக்கமுற்ற நிலையில் கிராம வாசிகள் அவளைக் கண்டனர். அவளது உடலில் தெரியக்கூடிய காயங்களோ கீறல்களோ இருக்கவில்லையாயினும் அவளது பாடசாலைச் சீருடையின் கீழ்ப் பகுதியில் இரத்தக்கறைகள் காணப்பட்டன. முச்சக்கர வண்டியின் சாரதி, நிகாலின் நண்பனொருவனான விமல் என்பவனெனப் பின்னர் பொலிசாரினால் அடையாளங் காணப்பட்டான்.

தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தி நிகால் மற்றும் விமல் ஆகியோரால் புரியப்பட்ட குற்றங்களை ஆராய்க.

3. சுனிமால் என்பவன் தனது கிராமத்தில் பலசரக்குக் கடையொன்றின் சொந்தக்காரனென்பதுடன் கமால் என்பவன் அவனது வாடிக்கையாளர்களில் ஒருவனுமாவான். கமால் கடனுக்குப் பொருட்கள் வாங்கும் பழக்கமுடையவன் என்பதுடன் சம்பவ தருணத்தில் கணிசமான தொகையொன்று கமாலினால் சுனிமாலுக்குக் கொடுக்க வேண்டியுமிருந்தது. சம்பவ நாளன்று சுனிமாலின் கடைக்கு வந்த கமால் விட்டுப்பாவனைப் பொருட்கள் சில கேட்கவே, பாக்கியை திருப்பிச் செலுத்தாவிடில் தான் எதுவும் தர முடியாதெனக் கூறி சுனிமால் பொருட்கள் வழங்க மறுத்தான். சம்பாஷனை சூடான வாக்குவாதமாக மாறியதுடன் இருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதோடு பின்னர் அருகிலிருந்த பொருட்களை எடுத்தும் தாக்கத் தொடங்கினர். அவ்விடத்திலிருந்த வேறு வாடிக்கையாளர்கள் சண்டையை நிறுத்த வேண்டியதாயிற்று. சுனிமால் சிறு காயங்களுக்கே ஆளாகியிருந்த போதிலும் கமால் அதிகமான இரத்தப் பெருக்குடன் காணப்பட்டான். இருவரும் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். தனது காயங்கள் காரணமாகச் சில மணித்தியாலங்களின் பின்னர் கமால் இறந்தான்.
பின்வரும் இரு வேறு சந்தர்ப்பங்களில் சுனிமாலினால் புரியப்பட்ட குற்றங்களை தண்டனைச் சட்டக் கோவையின் வாசகங்கள் (சரியான உபபிரிவு [limb] உட்பட) மற்றும் வழக்குச் சட்டம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்குக:

(i) அண்மையில் கமால் *Hernia* என்பதற்கான சத்திர சிகிச்சையொன்றினை மேற்கொண்டிருந்தான் என்பதுடன் அதன் காயம் முழுமையாக ஆறியிருக்கவில்லை. சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட அதே இடத்தில் புரியப்பட்ட பலமான தாக்குதல் இறப்பிற்குக் காரணமென பிரேத பரிசோதனை அறிக்கை வெளிப்படுத்தியது:

(ii) கமாலின் தொடையில் ஆளமான வெட்டுக் காயம் காணப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையின் படி உடைந்த கண்ணாடிப் போத்தல் ஒன்றினால் ஏற்படுத்தப்பட்ட

வெட்டுக்காயம் பிரதான நாடிக்குளாய் ஒன்றினை அறுத்தது என்பதுடன் ஆளமான வெட்டுக்காயத்தினாலேற்பட்ட மிதமிஞ்சிய இரத்தப்போக்கு மரணத்திற்குக் காரணமானது.

4. நிகாம் என்பவன் மத்திய மாகாணத்தில் மருந்துப்பொருட்களில் ஈடுபடுபவனாகப் பணி புரிந்தான். மருந்துப்பொருட்கள் சம்பந்தமாக சுகாதார அமைச்சு அண்மையில் விதிமுறைகளை வெளியிட்டிருந்தது. அவ்விதிமுறை வாசகங்களில் ஒன்று பின்வருமாறு ஏற்பாடு செய்தது:

"சுகாதார அமைச்சின் தகுதி வாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்டதான அனுமதிப் பத்திரத்தின் கீழுள்ள அதிகாரத்தினால் அல்லாமல் எவரும் இலங்கையின் மாகாணங்களுக்கிடையில் எந்த விதமான மருந்துப் பொருட்களில் ஈடுபடவோ, விநியோகிக்கவோ, கொண்டுசெல்லவோ அல்லது பிரயாணப்படுத்தவோ அனுமதிக்கப்பட மாட்டார். அனுமதிப் பத்திரம் ஒன்றின்றி எவராவது ஈடுபட்டால், விநியோகித்தால், கொண்டு சென்றால் அல்லது பிரயாணப்படுத்தினால் அவர் குற்றமொன்றிற்கு குற்றவாளியாவதுடன் இரண்டு வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய மறியல் தண்டனைக்கு அல்லது ஒருலட்சம் ரூபா வரையிலான தண்டப்பணத்திற்கு அல்லது இரண்டிற்கும் தண்டிக்கப் படலாம்."

இதன் பின்னர் நிகாம் மத்திய மற்றும் தென் மாகாணங்ககளில் மருந்துப்பொருட்களில் ஈடுபடுவதற்கும் விநியோகிப்பதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டான். ஒரு நாள் அவன் காலியிலிருந்து கண்டி நோக்கி, கொழும்பு வழியாகப் பயணம் செய்து கொண்டிருக்கும் போது, தென் மாகாண எல்லையான பெந்தோட்டையைக் கடந்த சற்று நேரத்தின் பின் அவனது வண்டி பொலிசாரினால் நிறுத்தப்பட்டதோடு அனுமதிப் பத்திரமொன்றின்றி மருந்துப்பொருட்களைக் கொண்டு சென்றமைக்காக அவன் கைதும் செய்யப்பட்டான்.

குற்றமுயற்சி சம்பந்தமான சட்டத்தைப் பிரயோகிப்பதன் மூலம் நிகாமின் குற்றவியற் பொறுப்பினை ஆராய்க. இலங்கை மற்றும் இங்கிலாந்தில் காணப்படுகின்ற பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் வழக்குச் சட்டத்தால் உமது விடையை ஆதாரப்படுத்துக.
இலங்கைச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களைச் சிபாரிசு செய்க.

5. (i) 'மரண தண்டனை' என்பது இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் வாதங்களுக்கு உட்பட்ட ஒன்றாகும். இது சம்பந்தமான பிரதான பிரச்சனை மரண தண்டனையை வழங்குவதற்குச் சட்டம் ஏற்பாடு செய்ய வேண்டுமா என்பதாக இருக்க. அதனுடன் தொடர்பான அடுத்த பிரச்சனை சட்டம் அவ்வாறு ஏற்பாடு செய்தாலும் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களுக்கு மட்டும் நிறைவேற்றுதல் காணப்பட வேண்டுமா என்பதாக உள்ளது.
மரண தண்டனை ஏற்படுத்தக்கூடிய தாக்கம் மற்றும் தண்டனை பற்றிய கோட்பாடுகள் ஆகியவற்றின் பின்னணியில் மேற்போந்த கூற்றுக்கான சாதகமானதும் பாதகமானதுமான வாதங்களைத் தருக.

(ii) 'சமுதாயமானது எவரும் குடிபோதைக்கு உட்படுவதை ஊக்குவிப்பதில்லையாயினும் சட்டமானது பூரணமான மற்றும் தணிக்கும் பாதுகாப்புக்களை குடிபோதைக்கு வழங்குவதன் மூலம் மிதமான போக்கினைக் கையாளுகின்றது'

நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் வழக்குச் சட்டத்தினை ஆதாரமாகக் கொண்டு மேற்போந்த கூற்றினை விமர்ச்சிக்க.

6. இலங்கையின் சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவரொருவராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர் என அனுமானிக்க. உமது முதல் கடமையாக பொதுவான எண்ணம் பற்றிய சட்டத்தில், அது அடிக்கடி ஒரே எண்ணம் மற்றும் தூண்டுதல் என்பவற்றுடன் குளப்பப் படுவதால் காணப்படுகின்றதான தெளிவின்மை சம்பந்தமாக நிபுணத்துவக் கருத்து ஒன்றினை எழுதுமாறு வேண்டப்படுகின்றீர்.

தற்போது இலங்கையிலும் இந்தியாவிலும் காணப்படுகின்றதான சட்டங்களுடன் தொடர்பு படுத்தி நிபுணத்துவக் கருத்தொன்று வரைக.

7. (i) இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் கீழுள்ள குற்றமான நம்பிக்கை முறிவு எனும் குற்றத்தினை நிரூபிப்பதற்குத் தேவையான கூறுகளை ஆராய்க. தீர்க்கப்பட்ட வழக்குகளால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(ii) 'Computer Crimes Act No.24 of 2007 என்பதன் உருவாக்கத்தினால் இலங்கையின் குற்றவியல் சட்டமானது அதன் தொழில்நுட்ப நவீனத்துவத்தை அடைந்தது என்று கூறினால் அது மிகையாகாது'.
ஆராய்க.

*